என்று மனுக்கள் கொடுத்தால், மின்சாரம் வழங்குகிறோம். வீதிகளுக்கு மின்சாரம் வேண்டும் என்று ஊராட்சி ஒன்றியங்கள் தீர்மானம் போட்டு அனுப்பினால், அதற்குரிய வரைப்படங்கள் போட்டு அனுப்பினால், நாம் மின்சாரம் தருகிறோம். மின்சார வாரியம் தரலாம். அதுதான் வழி.

டாக்டர் ந. மாசிலாமணி : தலைவர் அவர்களே, தாழ்த் தப்பட்ட சமுதாயத்திற்காக கட்டித் தரப்படுகின்ற, ஆர்.எல். ஈ.ஜி.பி., என்.ஆர்.ஈ.பி., தாட்கோ மூலமாக கட்டப்படு கின்ற காலனிகளுக்கு, மின் இணைப்பு தரப்படுவதில்லை. எனவே அந்த வீடுகளுக்கு அரசு இலவசமாக மின் இணைப்பு தர முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர் களே, அந்த வீடுகளுக்கும் மின் இணைப்பு கொடுக்க வேண்டும் என்ற வகையில் அண்மையில் அரசு உத்திரவு பிறப்பித்திருப்ப தாக எனக்கு நினைவு.

250 K. V. டிரான்ஸ்பார்மர்கள்.

கு. கா. வி. எண். 7 (*வினா எண் 9072)—திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) 250 கே. வி. சக்தி கொண்ட டிரான்ஸ்பார்மர்கள் அரசிடம் இருப்பில் இல்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 250, கே. வி. சக்தி கொண்ட டிரான்ஸ்பார்மர்கள் பழுதடைந்து விட்டால் அதையே பழுதுபார்த்து வைக்கவேண்டியிருக்கிறது. இதற்கிடைப்பட்ட காலத்திலே தண்ணீர் இல்லாமல் பயிர்கள் வாடுவதால் உற்பத்தி குறைந்து அதன் மூலமாக விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, 250 கே.வி. டிரான்ஸ்பார்மர் களுக்குப் பதிலாக 100 கே. வி. டிரான்ஸ்பார்மர்களை வைப்ப தால் அந்த நேரத்திலே மின் சப்ளை குறைவதால் மோட்டார்

1986 ஏப்ரல் 26]

களின் காயில் தீய்ந்துபோகிற காரணத்தினால் அதனாலும் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்ட குறைகளைப் போக்குவதற்காக 250 கே. வி. டிரான்ஸ்பார்மர்களையே வாங்கி வைப்பதற்கு அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கடந்த 4 மாதங்களிலே 150, 250 கே.வி,ஏ. மின்மாற்றிகள் வாங்கப்பட்டுள்ளன. மேலும் 447, 250 கே.விஏ. மின்மாற்றிகள் வாங்குவதற்கு உத்தரவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. 145 மினமாற்றிகள் ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் வந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. துரை அன்பரசன் : தலைவர் அவர்களே, 250 கே.வி. டிரான்ஸ்பார்மர்கள் இல்லாது இருப்பது தென் ஆற்காடு மாவட்டத்தில் மட்டுமா? அல்லது தமிழகம் முழுவதுமா ? தமிழகம் முழுவதும் என்றால் 250 கே. வி. டிரான்ஸ்பார்மர்கள் இருந்த இடத்தில் மூன்று 100 கே. வி. டிரான்ஸ்பார்மர்களைப் பொருத்தி எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தமிழகத்தின் பல்வேறு இடங்களிலே இத்தகைய 250 கே. வி. ஏ. மின்மாற்றிகள் உள்ளன. அவற்றிற்காக மூன்று 100 கே. வி. மின்மாற்றிகளை வைப்பதைவிட 250 கே. வி.ஏ. மின்மாற்றிகள் வைப்பதுதான் சிறந்தது. அவை இல்லாதபோது வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற யோசனையைப் பரிசீலிக்கலாம்.

தலைஞாயிறு ஸ்ரீகோதண்ட ராமஸ்வாமி கோயில்.

573—(*வினா எண். 3704)—திரு. எம். செல்லமுத்து மற்றும் **திரு. கோ. வீரய்யன்**: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் தலைஞாயிறு ஸ்ரீகோதண்ட ராமஸ்வாமி கோவில் சிலைகள் திருட்டு போனது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) களவாடப்பட்ட சிலைகளும், நகைகளும் முழுவதும் கைப்பற்றப்பட்டுவிட்டன.

திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே தலைஞாயிறு கோதண்டராமசாமி கோயில் சிலைகள், நகைகள் முழுவதும் களவாடப்பட்டு